தாத்தா

காலை வெயிலின் தாக்கம் சற்று தணிந்து, காற்று மெல்ல வீசிக்கொண்டிருந்தது. ஆரோக்கியமற்ற புகைமூட்டப்பிரச்சினை விலகி வானம் தெளிவாக இருந்தது. அன்று ஞாயிற்றுக்கிழமை வாரத்தின் இறுதிநாள்.பல நாட்கள் தங்களின் விருப்பமான நடவடிக்கைகளில் ஈடுபடமுடியாமல் வருந்தியவர்களுக்கு அன்று உற்சாகமளிக்கும் பொழுதாக புலர்ந்திருப்பது இன்பமாக இருந்தது.

அங் மோ கியோ வட்டாரத்தில், அந்த நடைபாதையும் அதை ஒட்டியுள்ள பெரிய பச்சைப்பசேலென்று பசுமையாக உள்ள புல் தரையும் பலவித உடற்பயிற்சிகள் செய்வதற்கு வசதியாக போடப்பட்டதாகும். அங்கு பல வயதினர்கள் இன நல்லிணக்கத்துடன் விருப்பமுள்ள பொழுதுப்போக்கில் மகிழ்ச்சியாகவும் உல்லாசமாகவும் இருப்பதை காணமுடிந்தது. அவர்களில் சிதம்பரமும் ஒருவர். பேரன் கதிரவன் அவருக்கு முன்னால் இருச்சக்கர வண்டியை மெல்ல ஓட்டிச்செல்ல கைகளை பக்கவாட்டில் வீசிக்கொண்டும் கால்களை மெதுவாக உதறிக்கொண்டும் நடைப்பயிற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தார், என்றும் இல்லாமல் அன்று பேரனும் உடன் வந்தது தான் சிதம்பரத்தின் எல்லையில்லா மகிழ்விற்கு காரணம்.

சுமாராக ஐம்பது நிமிடங்களுக்குப்பின் இளைப்பாறலாம் என்று இருவரும் அங்கு போடப்பட்டிருக்கும் காலியான நீண்ட இருக்கை ஒன்றில் அமர்ந்தனர். வீட்டை விட்டு வெளியில் வரும் பொழுது எடுத்துவரும் தண்ணீர் பாட்டிலை திறந்து இருவரும் தாகம் தீர நீரை அருந்தினார்கள். அவர்கள் அமர்ந்திருக்கும் இடத்திற்கு சற்று தள்ளி சில ஆண்களும். பெண்களும் “தைச்சீ” (சீனர்களின் ஒருவகை உடற்பயிற்சி) செய்வதை பார்த்துக்கொண்டும், இடையிடையே சிலர் மெது ஓட்டம் ஓடும் பொழுது, அவர்களின் செல்லப்பிராணிகளும் பின் தொடர்ந்து ஓடுவதைப் பார்த்து சிரித்துக்கொண்டிருந்தார்கள்.

ஏதோ ஞாபகம் வந்த மாதிரி “தாத்தா, அப்பாவும் சின்ன பையனா இருக்கும் போது சைக்கிள் ஓட்டுவறா?” “ம்.. ஓடடுவாரு, ஆனா நண்பர்கிட்ட இரவல் வாங்கித்தான் ஓட்டுவாரு!” என்றவரிடம் ஆச்சரியத்துடன் “ஏன்? தாத்தா” என்று வினவும் பேரனிடம் “அப்போ, எல்லாம் அப்படித்தான் பக்கத்துவீட்டு சீன, மலாய்க்கார பிள்ளைகள் என்று எல்லோரும் ஒண்ணாச்சேர்ந்து தான் விளையாடப்போவாங்க! கண்ணாமூச்சி, போலீசுதிருடன், கோலி, பம்பரம் விடுறது,

ஓடிப்பிடித்து விளையாடுறது சாயந்தர நேரம், லீவு நாளு எல்லாம் ஒரே விளையாட்டா இருக்கும்! இப்போ எங்கே? உங்களுக்கு நேரமே இல்லையே! என்று தாத்தா கூறியதைக் கேட்ட பேரனின் முகம் வாடி இருப்பதைப் பார்த்தவர், உடனே "ஆனா. உங்களுக்கு இப்போ கணினி இருக்கு, கைத்தொலைபேசி இருக்கு, நிறைய சாப்பாட்டுக் கடைகள், புதுப்புதுச்சட்டைகள் வாங்க கடைகள் நூல் நிலையம், போய் சுற்றிப்பார்க்க நிறைய இடங்கள் என்று அடுக்கிக்கொண்டே போனார் சிதம்பரம், இப்பொழுதுத் தான் பேரனின் முகத்தில் பால்பற்கள் விழுந்து விட்ட வாயை திறந்து சிறு புன்னகைப் பூத்ததும். அவரே தொடர்ந்தார் "எல்லாம் இருந்தாலும் படிப்பும், ஒழுக்கமும் தான் ரொம்ப முக்கியம்!" என்றார்.

"ஒழுக்கம்னா என்ன? தாத்தா "என்ற கேள்வியைக் கேட்ட பேரனிடம் "மற்றவங்க, நம்மகிட்ட எப்படி மரியாதையா நல்ல படியா நடந்துக்கணும், நமக்கு என்ன செய்ய வேணும் என்று நினைக்கிறமோ, அதேமாதிரி, நாமும் மற்றவங்ககிட்ட நடக்க வேணும்! அது தான் ஒழுக்கம்!"

என்று எட்டுவயதே நிரம்பிய பேரனுக்குப் புரியும்படி நிறுத்தி நிதானமாக விளக்கிச் சொன்னார் சிதம்பரம். கதிரவனும் அவர் சொல்வதையே கூர்ந்துக் கேட்டுக் கொண்டிருந்தான். "அதே மாதிரி, உன்படிப்பும் மற்றவர்களுக்கு உதவும்படி இருக்க தொண்டுசெய்ய வேண்டும், கதிரவா!" என்றவரிடம். சரி என்பதற்கு அடையாளமாக தலையை வேகமாக அசைத்தவன், கண்களை பெரிதாக்கிக் கொண்டு வியர்ந்து "தாத்தா, உங்களுக்கு மட்டும் எப்படி நிறைய விசயங்கள் தெரியுது? "என்று ஆவலோடு வினவும் பேரனிடம் பெருமையுடன் மகிழ்ச்சியோடு " எல்லாம், எங்க தமிழாசிரியர் ராமசாமி அய்யா தான் காரணம்" என்று கூறியவர் "அவரு எழுதின புத்தகம் நிறைய இருக்கு எல்லாம் படி தாத்தாவும் தெரிந்த எல்லாம் சொல்லித்தரேன்" என்றார் உடனே " சரிங்க தாத்தா!" என்ற பேரனை உள்ளம் மகிழ அணைத்துக்கொண்டார் சிதம்பரம். "சரி கிளம்புவோமா!" என்றவரிடம் "சரி தாத்தா!" என்று இருவரும் உரையாடிக் கொண்டே நடந்தார்கள், அவர்களுக்கு நேரம் போனதே தெரியவில்லை! வீட்டில்.....?

அந்தபகுதிஅடுக்குமாடிவீடுகளிலன் ஒன்றில் பதிமூன்றாவதுதளத்தின் கடைசியில் இருந்தவீட்டுவாசலின் அழைப்புமணியை அழுத்தினா் சிதம்பரம். சற்றுநேரத்தில் கதவை திறந்த பணிப்பெண் ‘‘சாா் அவங்க வந்துட்டாங்க!’’ என்று ஆங்கிலத்தில் கூறினாள். சோபாவில் அமா்ந்து தொலைக்காட்சியை பாா்த்துகொண்டு இருந்தவன், அதை நிறுத்திவிட்டு திரும்பியவன் ‘‘என்ன? அப்பா, எங்கே போனீங்க கைத்தொலைப் பேசியையும் வைத்துவிட்டுப் போய்விட்டீங்க

இவ வந்து தேடிப்பாா்த்தாள் உங்களை காணோம்,ஏன்? இவ்வளவு நேரம்!’’ என்று சற்று குரலை உயா்த்தியப்படி அமுதன் கேள்விகளை நீட்டினான். அதற்கு அவா் பதில் கூறும் முன் அருகில் நின்ற மகனிடம் கோபத்துடன் உதட்டை கடித்துக்கொண்டே, ‘‘ஏன்? உனக்குத்தெரியாதா, இன்னைக்கு கராத்தே வகுப்பு இருக்குனு? இப்பவே பார் மணி ஒன்பதாகிவட்டது, போ.. சீக்கிரம் கிளம்பு என்று மகனை விரட்டினான்.

வீரரென்று மனைவியுடன் அறைக்குள் சென்று கதவை சாத்திக்கொண்டவனை புண்பட்ட மனத்துடன் பார்த்தது நின்றவரிடம் அருகில் வந்த சிவகாமியம்மாள் ஆறுதலாக ‘‘சரி, விடுங்க வந்து பசியாறலாம் வாங்க!’’ என்று அன்புடன் அழைக்கும் இல்லாளை நோக்கி ‘‘தம்மை ஒன்றும் பேசவிடவில்லை. பேரனை ஏன் ? கோபித்துக் கொள்ள வேண்டும்’’ என்பதை வருத்தத்துடன் சைகையில் காட்டினார் சிதம்பரம்.

அன்று காலையில் வெளியே சென்றவர்கள் இரவு பதினொரு மணிப்போல வீடு திரும்பினார்கள். வெளியே அவர்களின் ஆராவரம் கேட்டப்பின் தான் அறையில் அந்த முதியவர்கள் நிம்மதி பெருமூச்சு விட்டாா்கள் . அமைதியாக சிவகாமியம்மாள் தூங்கிவிட்டார்.ஆனால் சிதம்பரம்...?

‘‘குடும்பத்துடன் வெளியே போய் வருகிறேன் என்று பணிப்பெண்ணையும் அழைத்துக்கொண்டு சொன்னானே அப்போ நாங்க இரண்டு பேரும்...? ‘‘வருத்தம் பெருமூச்சுகளாக வெளிவந்தன.

அகவை எழுபத்திரண்டைத்தாண்டினாலும் ஆரோக்கியமான வாழ்க்கை முறையை பின்பற்றுவதால் அதிகமான உடற்கோளாறுகள் இன்றி, பெரும்பாலும் வயதான காலத்தில் வரும் சா்க்கரை நோயும் அளவோடு இருந்தது.ஓய்வு நேரங்களில் நிறைய வாசிக்கும் பழக்கம் கொண்டவா் நடக்கும் தமிழ் நிகழ்ச்சிக்கு

மனைவியையும் அழைத்து செல்வது. அந்தக் கால நண்பர்களுடன் கலந்துரையாடல், மற்றும் சமூக மன்றங்களில் முடிந்த உதவிகளையும் செய்து வந்தார். நல்ல சிந்தனையாளர்

அந்த காலத்தில் ஆன்சன் சாலையில் இருந்த தனியார் கட்டிடத்தில் இரவு நேர பாதுகவலராகவும், பகல் நேரங்களில் ஓய்வு நேரம் போக கிடைக்கும் சிலமணிநேரவேலை எதுவாக இருந்தாலும் குடும்பத்தை நினைத்தே உழைத்தார்.

மனைவி சிவகாமி, ஒரே மகள் மூன்று மகன்கள் என ஐவருடன் சேர்ந்து வந்தவர்கள், போனவர்கள் என அனைவரையும், வீட்டையும் பொறுப்புடன் கவனித்து வந்தார். மகளை ஊரில் தமிழாசிரியராக பணிப்புரிந்த மைத்துனர் மகனுக்கே மணம் முடித்ததுக்கொடுத்து வேண்டிய வசதிகளையும், உதவிகளையும் செய்தார். அதே போல் மூத்த மகனுக்கு தங்கையின் பெண்ணையும் ஊரில் இருந்து வரவழைத்து மணம் முடித்தார். இரண்டாவது மகன் தான் அமுதன் மூன்றம் மகனும் திருமணமாகி ஐந்து ஆண்டுகளாகியும் குழந்தைகள் இன்றி இருக்கிறார்கள்.

சிதம்பரம் இவர்கள் யாரையும் தொந்தரவு செய்யக் கூடாது என்று தனியாக தம் மனைவியுடன் வாழ்ந்து வந்தார். இதுவரை ஆர்ச்சட் சாலையில் பகுதிநேர பாதுகாவலராக வேலை பார்த்து வந்ததையும் நிறுத்திக்கொண்டார். அதற்கு காரணமே சில மாதங்களுக்கு முன்பு மகன் அமுதனுக்கு பெண் குழந்தை பிறந்து, அதன் பெயர் சூட்டும் விழாவிற்கு வந்தவர் பேரன் கதிரவனின் பேச்சிலும். பேத்தியின் அழகு சிரிப்பிலும் கரைந்து போனார் அவர்களுடன் தங்கி இருப்பதங்கான அனுமதியோடு தங்களுக்கு ஆகும் செலவுகள் அனைத்தையும் தாமே கவனித்துக் கொள்வதாகக் கூறி சிவகாமியம்மாளுடன் அங்கு தங்க வந்து எட்டு மாதங்கள் கடந்துவிட்டன.

காலையில் நடந்த சம்பவம் மீண்டும் மனதில் வேதனையுடன் அலைமோதினாலும், பேரன் கதிரவனின் அறிவுக்கூர்மையும், பேத்தியின் பொக்கைவாய் சிரிப்பும் அதுவரை மன அழுத்தத்தை கொடுத்த அனைத்தையும் மறந்து போக நிம்மதியாக உறங்க தொடங்கினார்.

விடிந்து வெகுநேரம் ஆகிவிட்டதை உணர்ந்தவர் போல் அறையைவிட்டு வெளியே வந்தார். அப்பொழுது பணிப்பெண் முன் வாசலை துடைத்துக்

கொண்டிருந்தாள். அவரைப் பார்த்தவுடன் ‘‘காலை வணக்கம்’’ என்று ஆங்கிலத்தில் கூறினாள் அவரும் சிரித்தமுகத்துடன் பதில் வணக்கம் கூறிவிட்டு சமையலறைப் பக்கம் மெல்ல நடந்து சென்றார்.

அவர் வருவது தெரியாமல் சன்னல் வழியாக வெளியே வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்த சிவகாமியம்மாளை அழைத்தார். ‘‘ம்.... என்னங்க, நல்ல தூக்கமா?’’ என்றதும் ‘‘ஆமாம்... அவங்க எல்லாம் கிளம்பிட்டாங்களா? ‘‘என்று கேட்டவரிடம், ‘‘ஆமாங்க, அவங்க இரண்டு பேருக்கும் மத்தியானச் சாப்பாடு கட்டிக் கொடுத்தேன். பேரனிடம் மட்டும் தாத்தாவிடம் கொடுத்து அனுப்புகிறேன்,’’ என்று சொல்லி அனுப்பிவிட்டேன் நீங்க குளித்து விட்டு வாங்க இட்லியும், உங்களுக்கு பிடிச்ச புதினா சட்னியும் தயாரா இருக்கு பசியாறலாம், பேத்தி இன்னும் தூங்கிட்டு இருக்கா.... பால் கூட குடிக்கல, அந்தப் பொண்ணு கிட்ட வேலையை முடிச்சு விட்டு, கடைக்குப்போய் கீரை வாங்கி வரச்சொல்லி இருக்கேன், நம்ம பழைய வீட்டு பக்கத்துக்காரங்க இப்பத்தான் போன்லே பேசி வைச்சாங்க! ‘‘என்று இரயில் வண்டி ஏறப்போகும் அவசரப்பயணியைப்போல ‘‘மளமள’’ வென்று பேசி முடித்தார் சிவகாமியம்மாள். அவர் கூறியவற்றையும் பாசமிகு கணவராக அமைதியாகக் கேட்டுவிட்டு’’ நீ சாப்பிட்டாயா?’’ என்று சிதம்பரம் கேட்டதற்கு ‘‘இல்லை’’ என்று தலையாட்டிய மனைவியிடம் ‘‘சரி, எல்லாம் எடுத்து வை’’ என்று கூறி குளியலறை நோக்கிச் சென்றார்.

வெயில் மண்டையை பிளக்கும் அளவு இருந்தது. நன்கு குழைய வைத்த சோற்றுடன் கடைந்த கீரை பாசிப்பருப்பையும் சேர்த்து காய்ச்சிய நெய்யை இரண்டு சொட்டு அதிகமாகவே விட்டு தயாரித்த உணவை கிண்ணத்தில் எடுத்து வைத்துக் கொண்டார்.

குளியல் முடிந்து அபார பசியுடன் இருக்கும் கைக்குழந்தைக்கு ‘‘டப்பாவில்’’ அடைக்கப்பட்ட உணவைத் தயாரிக்க முயன்றவளிடம், ‘‘இதெல்லாம் வேண்டாம்போ’’ என்று பிடுங்கி ஓரமாக வைத்துவிட்டு கிண்ணத்தில் இருக்கும் நெய் மணக்கும் உணவை பேத்திக்கு ஊட்ட முற்பட்டவரிடம் ‘‘இல்லை!இல்லை! ‘‘(பணிப்பெண்ணுக்கு தெரிந்த சில தமிழ் சொற்களில் ஒன்று) என்றவளிடம், ‘‘நீ! போ அங்கே’’ என்று வெளியே கையை நீட்டினார் சிவகாமியம்மாள் ‘‘என்னடா செல்லம், பாட்டி சாப்பாடு தானே பிடித்து இருக்கு

என்று கைகளை தட்டிக்கொண்டு ஆவலோடு விரைவாக வாயை திறந்து திறந்து காட்டும் பேத்தியிடம், கூறிக்கொண்டு தானும் ஒரு குழந்தையைப் போல் மாறி தலையை ஆட்டியாட்டி பேசிக் கொண்டு சாப்பாட்டை ஊட்டினார் அடுத்த அறையில் இருந்துக்கொண்டு நேரடி வர்ணனை செய்யும் பணிப்பெண்ணை பற்றியோ அல்லது மறுமுனையில் கேட்டுக்கொண்டிருக்கும் மருமகளை பற்றியோ ஒன்றும் அவருக்கு கவலை இல்லை. தம் பேத்தியின் வயிறு நிறைந்து.

சிரித்தது போதும்! என்று இருந்துவிட்டார். பேரன் கதிரவனுக்கு உணவை கொடுத்துவிட்டு, வெயிலில் வந்த களைப்புடன் வரவேற்பறையில் அமர்ந்து அனைத்தையும் பார்த்துக் கொண்டிருந்தார் சிதம்பரம்.

வழக்கம்போல் எல்லாம் நடந்துக்கொண்டிருந்தன. மகன் அமுதனும், மருமகளும் தாயிடம் காட்டும் அதே அன்பு! தன்னை மட்டும் வேண்டாதவனாக பார்க்கும் பார்வைகள் எல்லாவற்றையும் கவனித்து வந்தார். நடக்கும் விசாரணையற்ற வழக்கீன் தீர்ப்பு வரும் நாள் என்றோ? என்று தான் காத்திருந்தார்.

அன்று வெள்ளிக்கிழமை மாலை, நீச்சல் வகுப்பிலிருந்து வந்தவர்கள் கொஞ்சநேரம் ஓய்வுக்குப்பின், வீட்டுப்பாடத்தை செய்யட்டும் என்று பேரன், தாத்தா, சிவகாமியம்மாள் மடியில் கைக்குழந்தை என அனைவரும் தொலைக்காட்சியில் கேலிச்சித்திரம் பார்த்து ரசித்துக் கொண்டிருந்தார்கள். அவர்களின் வருகையை அந்நேரத்தில் யாரும் எதிர்பார்க்கவில்லை. வந்தவர்கள் நேராக தங்களின் அறைக்குச் சென்றார்கள். அதுவரை சாய்வாக அமர்ந்து இருந்தவர்கள் நிமிர்ந்து கொண்டார்கள்.

சிறிது நேரத்தில் மாற்றுடையுடன் அமுதன் வெளியே வந்தான். சாப்பாடு மேசையின் ஒரு நாற்காலியை இழுத்துப் போட்டுக்கொண்டு, அவர்களுக்கு சற்று அருகில், ஆனால் சுவரை பார்த்தப்படி வந்து அமர்ந்தான். அதே சமயம் இரண்டு கோப்பைகளில் தேநீருடன், சில “கேக்” துண்டுகளை தட்டில் வைத்து மேசையில் கொண்டு வந்து வைத்துவிட்டு சென்றாள் பணிப்பெண்.

தன் கையில் இருந்த குழந்தையை எடுத்துக்கொண்டு செல்லும் மருமகளை மௌனமாகப் பார்த்து கொண்டிருந்தார் சிவகாமியம்மாள்.

“கதிர், என்ன? வீட்டுப்பாடம் இல்லையா? நிறுத்தி விட்டு எழுந்துப் போய் படி” என்று கண்களால் முறைத்தப்படி விரட்டியவுடன் தொலைக்காட்சியை நிறுத்திவிட்டு தன் அறைக்கு ஓடினான் கதிரவன். குழந்தையை தூக்கிக் கொண்டு தன் தேநீரையும் எடுத்துக்கொண்டு சாப்பாட்டு மேசைப்பக்கமாக சென்று அமரும் மனைவியை திரும்பி ஒருமுறை பார்த்துவிட்டு திரும்பியவன்.

“அப்பா!அம்மா! நான் கொஞ்சம் பேச வேணும்” என்று அமுதன் பேச்சை தொடங்கினான். நடக்கும் பனிப்போர் ஒரு முடிவுக்கு வரவேண்டும் என்று காத்திருப்பவர் ஆயிற்றே உடனே” “ம்… சொல்லப்பா!” என்றார் சிதம்பரம்.

“அண்ணன்கிட்ட பேசினேன், அங்கேயும் மூணு, நாலு மாசம் இருக்கலாம், அப்புறம் ஊரிலே அக்கா வீட்லே போய் தங்கியிருந்து வரலாம், அப்புறம் தம்பி வீடு… ஏன்னா…?

உங்களுக்கும் ஒரே இடத்திலே இல்லாம… மாறி மாறி இருந்தா… மகிழ்ச்சியா இருக்கும்…ம்…அதுக்குத்தான்” என்று சற்று தயக்கத்துடன் சொல்லி முடித்தான்.

மகனையே பார்த்துக் கொண்டிருந்தவர், எதிர்பார்த்தது வேறு! பரவாயில்லை ஒரு நிம்மதி பெருமூச்சுவிட்டார், “ சரி அமுதன், மற்ற பிள்ளைங்க வீடு தானே, அது எப்போ வேணும்னாலும் போய்கிலாம் இப்போ, என்ன அவசியம் வந்தது? என்றார்.

கால்களின் பெருவிரலால் தரையில் அழுத்தி அழுத்தி சுற்றுக்கொண்டிருந்தவன் எப்படி சொல்வது, எதை சொல்வது என்று தெரியாமல் தடுமாறினான் இப்பொழுது அவனின் நிலையை உணர்ந்தவர் போல “உங்களுக்கு பிரச்சனை நாங்களா? பிள்ளைகளா?” என்றார் நாசுக்காக. நெருப்புத்துண்டை மிதித்தவன் போல… “அப்பா!...” என்றான் அமுதன். மகன் போடும் அதட்டலுக்கு ஒன்றும் பயப்படாமல் “பேரப்பிள்ளைகளுக்கு நாங்க ரெண்டு பேரும் ஒன்னும் செய்யக்கூடாது அதானே?..” என்று உள்ளங்கை நெல்லிக்கனி போல தெரியும் உண்மையை சொன்னார். அவனும் விட்டுக்கொடுக்காமல் “அதுதான் அவ இருக்காளே!... “என்று மகன் கூறியதும்

சிதம்பரம் “ஓ…அப்படியா! “என்று மெல்ல தலையை மேலும் கீழும் அசைத்து சிவகாமியம்மாளை பார்த்தார்.

“ஆமாம், நாங்க தான் என்னென்ன வகுப்பு இருக்கு, என்ன? சாப்பாடுக் கொடுக்கணும், என்ன? செய்யணும் என்று எல்லா அட்டவணையும் போட்டு வைச்சு இருக்கிறோம். நீங்க வேற ஏன்?...தனியா!” என்று சிடுசிடுப்புடன் பேசினான், பொறுமையுடன் எல்லாவற்றையும் கேட்டவர் “அப்போ, எங்களுக்கணு எந்த உரிமையும் கிடையாதா?... நாங்க என்ன தடை கைதிகளா…சொல்லுப்பா?” என்று குரல் தழுதழுக்காகக் கேட்டார்.

“அவங்களுக்கு எல்லாம் சரியா சொல்லிக்கொடுத்து வளர்க்கணும்னு நினைக்கிறோம் அது தப்பா? “என்று மீண்டும் குரலில் ஓர் அழுத்தத்தை கொடுத்தான் அமுதன். தன் மகனின் வாய்மொழியாக அதை சற்றும் எதிர்ப்பார்க்காதப் பெரியவர் மெல்லிய குரலில்” நாங்க மட்டும் என்ன? எல்லாம் தப்பு தப்பாவா சொல்லிக் கொடுப்போம்!”என்று மிகவும் பரிதாபக்குரலில் கேட்டார்.

“ம்…!” என்று தந்தையை ஒரு பார்வை பார்த்து விட்டு முகத்தை திருப்பிக்கொண்டான்.

இது என்ன பெரிய கொடுமையாக அல்லவா இருக்கின்றது..! சம்பாதிக்க வந்தவளிடம் உள்ள நம்பிக்கை பெற்றவர்களிடம் இல்லை…? அப்படித்தானே” என்று மகனை பார்த்தப்படி கேட்டார். சிறிது நேரம் வரை பதில் சொல்லாமல் முகத்தை திருப்பிக்கொண்டு இருந்தவனிடம் சிவகாமியம்மாள் கன்னத்தை ஈரமாக்கும் கண்ணீரை முந்தானையால் துடைத்துக்கொண்டு “அமுதன், முகத்தை இப்படித்திருப்பி, அப்பா கேட்கிறார் பதில் சொல்லு” என்றார் வீசும்பும் குரலில்.

சீறிக்கொண்டு “இப்போ, நீங்க ஆரம்பிக்காதீங்க ஏம்மா மறந்து விட்டீங்களா? அந்த காலத்திலே எல்லாம் அவரு விருப்பம் போல தான் நடக்கணும்! ஒரே அக்கா! அவங்களையும் அங்கே போய் கட்டிக்கொடுத்தாரு! நமக்குனு என்ன பெரிசா செய்தாரு?”சற்று நிறுத்தியவன் “இப்பவும் உங்களுக்காகத் தான் பொறுமையா இருக்கேன்” என்று கூறிவிட்டு முகத்தை மீண்டும் திருப்பிக் கொண்டான்.

மகனை அதிர்ச்சியுடன் பார்த்து “என்னடா? இப்படிக்குத்தலா பேசுற அவரு செய்யாமலா, நீங்க எல்லோரும் ஆளானீங்க? ” என்றவர் அழுகைத் தொண்டையை அடைக்கப்பேச்சை நிறுத்திக்கொண்டார். கண்களில் வழியும் மனச்சுமையை கைகளால் துடைத்தால் மட்டும் போதுமா?

அந்த முதிய தம்பதிகள் தங்களின் ஆறுதலை கண்களால் பரிமாறிக்கொண்டார்கள்.

“தென்னையை வளர்த்தா இளநீரு! பிள்ளையை பெற்றா கண்ணீரு!” என்பது அன்று தான் முதல்முதலாக அனுபவமாயிற்று அவர்களுக்கு! அன்று கைக்குழந்தையும் சூழல் புரிந்து எந்தவித ஓசையும் எழுப்பாமல் அமைதியாக இருந்ததும், அங்கு நடக்கும் மனப் போராட்டங்களுக்கு ஓர் தீர்வு காண உதவியது.

மௌனம் கலைத்து பணிப்பெண்ணை அழைத்து இரண்டு டம்ளரில் வெந்நீர் கொண்டு வரச்சொன்னார். கொண்டு வந்துக் கொடுத்ததில் ஒன்றை மனைவியிடம் கொடுத்துக் குடிக்கச்சென்னார். மற்றொன்றை காய்ந்திருந்த தொண்டை நனைய முழுவதும் அருந்தி முடித்தார். அது சற்று இதமாக இருந்தது. லேசாகச் செருமிவிட்டுக் கொண்டார் சிதம்பரம்

“ அமுதன் இப்படிப் பார் !” என்றார் கனிவுடன். அவன் முகத்தை மறுபக்கம் சாய்த்தப்படி அமர்ந்துக் கொண்டான் “நான் சொல்றதை கொஞ்சம் கேளு!” என்றார் அந்தக்கால தகப்பனா கொஞ்சம் படிப்பு, குறைந்த சம்பளம் அதனால் .இரண்டு மூணு இடத்தில் வேலைப்பார்த்து , எவ்வளவு சிக்கனமா இருக்கமுடியுமோ இருந்து, கிடைக்கிற வேலை இடம் தூரமா இருந்தாலும் சைக்கிளாத்தான் போய் வந்தேன்.

“ஏன் ? உன் அண்ணனும் நீயும் சில நாட்கள் ராத்திரி சாப்பாட்டை வேலை செய்த இடத்திற்கு கொண்டு வந்து கொடுத்ததை மறக்கலப்பா!” என்றார் நெகிழ்வுடன்.

சிலவற்றை மீண்டும் நினைவுப்படுத்தி பார்க்கத்தான் வேணும்! குறைச்சவிலையில ஒரு துணியை வாங்கி அதிலே மூணு, நாலு சட்டை தைத்துபோட்டு வாழ்ந்து வந்ததாகத் தான் நினைப்பு!” என்று நிறுத்தினார்.

சிவகாமியம்மாளுக்கு கடந்த காலத்தின் நினைவுகள் பசுமையாக மனதில் நிழலாடிக் கொண்டிருந்தன சிதம்பரம் மீண்டும் தொடர்ந்தார். “செய்ததையெல்லம் சொல்லிக்காட்டி, உன் மனத்தை புண்படுத்த நினைக்கல... உன் அம்மாவும் சேர்ந்துத்தான் பல துன்பங்களை அனுபவிச்சா” என்று தம் மனைவியை நன்றியோடு பார்த்தார். பெருமூச்சுடன் “உங்களுக்குத்தான் எல்லாம் செய்தேன், ஆனா! உங்க மனசுக்குப் பிடித்த வாழ்க்கையை கொடுக்கவில்லைங்கறது” மகனைப் பார்த்துக்கொண்டே “ இன்றைக்குத் தான் தெரிந்துகிட்டேன்” என்றார் அமைதியாக.

அவரிடம் ஒரு உற்சாகம், “இப்போ எங்க மனசுப்பூரா இந்த பிள்ளைகளைப் பார்த்துக் கொள்வதில் தான் ரொம்ப மகிழ்ச்சியும் நிம்மதியுமா இருக்கு!” என்ற போது மகனை மீண்டும் பார்க்கிறார் “ செவிடன் காதில் சங்கு ஊதியது போல முகத்தில் எந்த உணர்ச்சியும் இன்றி அமர்ந்திருந்தான்.

தலையை ஆட்டிக்கொண்டே மீண்டும் தொடர்ந்தார். “நாங்க பெத்த பிள்ளைங்க நல்லா இருக்கணும் என்கிற ஒரே நினைப்போடு வாழ்ந்தவங்க ! இப்போ நீங்க பெத்த பிள்ளைங்களையா... கெடுத்துவிடுவோம்? கொஞ்சம் யோசித்துப்பார் “என்று அமுதன் சிந்திக்க வேண்டும் என்று நிறுத்தினார் மீண்டும் அவரே “அப்போ, அந்தக் காலத்திலே எங்களுக்கு கிடைக்காத நேரத்தை இப்போ உங்க பிள்ளைங்களோட செலவழிக்க விரும்புறோம்! உங்க விருப்பம் போல வளர்த்துகுங்க ! நாங்க ஒன்னும் அதைபற்றி சொல்லவில்லை, ஆனா தாத்தா, பாட்டியா எங்களுக்கும் கொஞ்சம் இடங்கொடுங்கத்தானுக் கேட்கிறோம் என்று மனம் இளகப்பேசியவர்
“பெத்த பிள்ளையா ! இதுவரை எதுவும் உரிமையுடன் கேட்டது இல்லை ! எங்கள வீட்டை விட்டுப் போகச்சொல்லாதே! மரண தண்டனை பெற்ற குற்றவாளிக்குக்கூட கருணை மனு இருக்கு ! அதைப் போலத்தான் கேட்கிறோம் என்று உணர்ச்சி வசப்பட்டுப் பேசிக்கொண்டிருந்தவர், திடீரென்று எழுந்து நின்று கைவணங்கி கேட்டார்! அதைசற்றும் எதிர்பார்க்காத அமுதன் அதிர்ச்சியில் துணுக்குற்றான்,
பின், நாற்காலியை காலால் பின்னுக்கு ஒரு தள்ளுத் தள்ளிவிட்டு எதுவும் பேசாமல் அறைக்கு விரைந்தான்.

சிவகாமியம்மாள் கணவரின் மறுப்பக்கத்தை பார்த்து உருக்கத்துடன் அமர்ந்து இருந்தார். சிதம்பரம் அவர்களின் மனநிலையை சொல்ல வார்த்தைகள் உண்டோ?

அங்கு நடந்தது எதுவும் புரியவில்லையென்றாலும் கதவின் இடுக்குவழி பார்த்துக் கொண்டு இருந்த கதிரவனின் பிஞ்சுமனம் ‘‘தாத்தா வேணும்’’ என்று மட்டும் கூறிக்கொண்டிருந்தது.

பெற்ற மனம் பித்து ! பிள்ளை மனம் ? கல்லாக இருக்கவில்லை.

தாயின் மீது கொண்ட பாசம் வளைந்துக் கொடுத்தது.

அந்த ஆண்டு முதல் கதிரவன், பள்ளித் தேர்வுகளில் உச்சத்தேர்ச்சியுடன், சிறந்த மாணவன் என்கிற நற்மதிப்பும் பெற்று வந்ததை பார்த்த அமுதன் தம்பதிகள் பூரித்துப் போனார்கள். நாளடைவில் சிதம்பரம் சிவகாமியம்மாளுக்கு போடப்பட்டடிருந்நத தடைகள் மெல்ல மெல்ல தகர்த்தப்பட்டன.

காலத்தின் சுழற்சி இயற்கையின் ஆளுமையில் நடந்துக் கொண்டுடிருந்தன. மாலை நேரம், சற்று ஓய்வாக சாய்வு நாற்காலியில் அமர்ந்துக்கொண்டு தொலைக்காட்சியை பார்த்துக்கொண்டிருந்தான் அமுதன். முன்பு இருந்த வீட்டை விற்று விட்டு இரண்டு மாடிகள் கொண்ட புதிய விட்டிற்கு குடிவந்து ஓா் ஆண்டு தான் இருக்கும். வெளியே தோட்டத்தில் மலா்ந்திருந்த மலா்களின் மணம் காற்றில் மிதந்து வந்து இதமாக வீசிக்கொண்டிருந்தது. மனைவியும் பணிப்பெண்ணும் கடைத்தொகுதிக்கு சென்றிருந்தார்கள். அந்த நேரத்தில் மாடிப்படிகளில் இருந்து இறங்கி வந்த மகன் கதிரவன், மருமகள் இருவரையும் பார்த்தவுடன் நிமிா்ந்து அமா்ந்துக்கொண்டான் அமுதன்.

‘‘அப்பா! இன்றைக்கு சமூக மன்றத்தில் ,வரும் தேசிய நாள் கொண்டாட்டத்தின் ஏற்பாடுகளைப் பற்றிய முக்கிய கூட்டம்,போய் வருகிறோம்! அப்படியே திரும்பி வரும்போது பல்கலைகழகத்திலிருந்து தங்கச்சியையும் அழைத்துவரேன். அப்பா!’’ என்று கூறிவிட்டு திரும்பியவன் கைகளில் இருப்பது ? ‘‘கதிர், அது என்ன ?’’ என்று அமுதன் கேட்டவுடன் தன் கையில் இருந்த புத்தகங்களைகாட்டி ‘‘ தாத்தா, கொடுத்த தமிழாசிரியர் ராமசாமி அய்யா புத்தகங்கள்!’’ நண்பரிடம் கொடுப்பதற்கு எடுத்துச் செல்கிறேன் என்று கூறிவிட்டு வாசலில் நிறுத்தியிருந்த வாகனத்தில் மனைவியுடன் புறப்பட்டான் கதிரவன்.

அவர்கள் சென்றதும் ‘‘ இந்தக் காலத்திலே கண்டதே காட்சி கொண்டதே கோலம் !’’ என்று வாழும் பெரும்பான்மையான இளையர்கள் மத்தியில், இங்கு

படிப்பு முடித்து, பின் வெளிநாடு சென்றுபடித்து, இன்று அரசாங்கத்தில் நல்ல தொரு பணியில் இருந்தாலும். கதிரவனின் பண்பும், குணமும் யாருக்கு வரும்?
சற்று நேரம் அமைதியாக இருந்தான். கதிரவனை தன் வளர்ப்புத் தான் என்று பெருமிதம் கொள்ள முயன்றாலும் குற்ற உணர்வால் குறுகிப்போனான்.
“இது நீர் மேற் குமிழி போன்றது நிரந்தரம் இல்லாத நிலை, ஓடும் சக்கரம் ஓர் இடத்தில் நிற்கத் தான் வேண்டும்” அன்று “உனக்கும் புரிந்து கொள்ள காலம் வரும் !” என்று அறிவுரையாக சொல்லி வந்தவர்… மெல்ல எழுந்து மலர்மாலை போடப்பட்ட அந்த பெரிய படத்தின் அருகில் சென்றான். படத்தின் வழி அவரின் பார்வை… பார்ப்பதை போன்றே இருந்தது. “அப்பா !...” (முதல் முறையாக அழைப்பதை போன்ற உணர்வு) “அப்பா.. மன்னித்து விடுங்க இப்போ உங்களைப் பற்றி நல்லாப் புரிந்துக்கொண்டேன்” என்று வாய்விட்டு சொல்லி பலமுறை மன்னிப்பு கேட்க வேண்டும் என்று உள்ளம் துடித்தாலும்… இன்று அவர் இல்லை!
மனம் கனத்தது, கண்களை கண்ணீர் மறைத்தது. அப்பா, தனக்காக செய்த அனைத்திற்கும் நன்றியோடு கண்ணீர் அஞ்சலி செலுத்தியது போல ஓர் நிம்மதி!..
மெய்சிலிர்க்க அமுதன், “அப்பா, நானும் விரைவில் ஒரு தாத்தாவாகப் போகிறேன் ! உங்க மாதிரி நானும்..! என்று நிறுத்தி ஏதோ யோசித்தவன், “ஆமாம்..அது தான் சரி, கதிர் கைகளில் !”. இதுவரை திரும்பிக்கூட பார்க்காத சிந்தனை களஞ்சியங்களை தேடி மகனின் நூலக அறைக்கு ஒடினான்.

சிறிது நேரத்தில் கையில் ஓர் புத்தகம்! அமர்ந்தான் புத்தகத்தை வாய்விட்டுப் படிக்க தொடங்கினான்
“ மானமும் அறிவும் தான் மனிதர்க்கு அழகு!” என்று படிக்கும் பொழுது கதிரவனை நினைத்து” மகன் தந்தைக்கு ஆற்றியுள்ள மிகப்பெரிய உதவியென்றால் அது ! இது அல்லவோ! என்று மனமகிழ்ந்தான் தாத்தா!(அமுதன்)
இந்த தாத்தாவிற்கு இது தான் ஆரம்பம்!

நிறைவு
(2349 சொற்கள்)